**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 107/2014**

**Deposition of Witness for : PW 17**

| | |
|---|---|
| **Name** | **:** திரு. தனபால் |
| **Father Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10-03-2023.**

**(A1 to A3 present)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது கீழ்சிறுப்பாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இறந்து போன பாபுவை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இவ்வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசாரும் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலீசார் விசாரணையில் எங்கள் ஊரைச் சேர்ந்த இறந்து போன பாபு வீட்டிற்கும், அண்ணாமலை வீட்டிற்கும் வீட்டுமனை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்ததாகவும், இது சம்மந்தமாக செங்கம் நீதிமன்றத்தில் வழக்கு நடந்ததாகவும், அந்த வழக்கு பாபு வீட்டாருக்கு ஆதரவாக தீர்ப்பாகிவிட்டது என்றும், அதனால் ஆஜர் எதிரி குடும்பத்தாருக்கும், பாபு வீட்டாருக்கும் அடிக்கடி பிரச்சனை இருந்து வந்ததாகவும், இது சம்மந்தமாக ஆஜர் எதிரிகள் மேல் முறையீடு செய்ததாகவும், அந்த வழக்கும் இறந்து போன பாபு வீட்டிற்கு சாதகமாக தீர்ப்பாகி விட்டதாகவும், இவர்களுக்கு இடையே அடிக்கடி சண்டை ஏற்பட்டு வந்ததாகவும், இது சம்மந்தமாக எங்கள் ஊரைச் சேர்ந்த சிதம்பரம், அமாவாசை மற்றும் ஊர் பெரியோர்கள் முன்னிலையில் பிரச்சனை பேசி சமாதானம் செய்து வைத்தோம் என்றும், அதன் பிறகு இறந்து போன பாபு கிரையம் வாங்கி வைத்திருந்த 1 3/4 ஏக்கரில் மரம் வெட்ட சென்றதாகவும், அப்போது ஆஜர் எதிரிகள் அங்கு சென்று தடுத்து நிறுத்தி தகராறு செய்தார்கள் என்றும், அப்போது பாபுவை பார்த்து ஆஜர் எதிரிகள் உன்னை கொலை செய்யாமல் விடமாட்டோம் என்று

மிரட்டியதாகவும், அந்த இடத்தில் நானும் மற்றும் ஊர் பெரியோர்களும் சென்று சமாதானம் செய்து வைத்தோம் என்றும், இந்நிலையில் கடந்த 25.4.2013ந் தேதி மாலை 6.45 மணியளவில் எங்கள் ஊரைச் சேர்ந்த வீராசாமி வீட்டின் திண்ணையில் பாபு உட்கார்ந்து இருந்தார் என்றும், அங்கு சென்ற ஆஜர் எதிரிகள் பாபுவிடம் தகராறு செய்து கத்தியால் குத்திவிட்டார்கள் என்று கேள்வி பட்டு நான் அங்கு சென்று பார்த்தபோது பாபுவின் கையில், கன்னத்தில், நெற்றியில், தலையின் பின்பக்கத்தில் ரத்தக் காயங்களுடன் இருந்தார் என்றும், அவரை அங்கிருந்தவர்கள் ஒரு டாடா ஏஸி வாகனத்தில் ஏற்றி திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், அங்கு பாபு சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாகவும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> -** இல்லை.

ஒம்/- தனபால்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**<u>SESSIONS CASE NO. 107/2014</u>**

**<u>Deposition of Witness for : PW 18</u>**

**Name** : திரு. அமாவாசை

**Father Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10-03-2023.**

**(A1 to A3 present)**

**<u>முதல் விசாரணை</u> -**

நான் தற்போது கீழ்சிறுப்பாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இறந்து போன பாபுவை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இறந்து போன பாபுவிற்கும், எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் பஞ்சாயத்து ஏதும் நடக்கவில்லை. அதில் நான் கலந்து கொள்ளவும் இல்லை. அவருக்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசாரும் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

போலீசார் விசாரணையில் எங்கள் ஊரைச் சேர்ந்த இறந்து போன பாபு வீட்டிற்கும், அண்ணாமலை வீட்டிற்கும் வீட்டுமனை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்ததாகவும், இது சம்மந்தமாக செங்கம் நீதிமன்றத்தில் வழக்கு நடந்ததாகவும், அந்த வழக்கு பாபு வீட்டாருக்கு ஆதரவாக தீர்ப்பாகிவிட்டது என்றும், அதனால் ஆஜர் எதிரி குடும்பத்தாருக்கும், பாபு வீட்டாருக்கும் அடிக்கடி பிரச்சனை இருந்து வந்ததாகவும், இது சம்மந்தமாக ஆஜர் எதிரிகள் மேல் முறையீடு செய்ததாகவும், அந்த வழக்கும் இறந்து போன பாபு வீட்டிற்கு சாதகமாக தீர்ப்பாகி விட்டதாகவும், இவர்களுக்கு இடையே அடிக்கடி சண்டை ஏற்பட்டு வந்ததாகவும், இது சம்மந்தமாக எங்கள் ஊரைச் சேர்ந்த சிதம்பரம், தனபால் மற்றும் ஊர் பெரியோர்கள் முன்னிலையில் பிரச்சனை பேசி சமாதானம் செய்து வைத்தோம் என்றும், அதன் பிறகு இறந்து போன பாபு கிரையம்

வாங்கி வைத்திருந்த 1 3/4 ஏக்கரில் மரம் வெட்ட சென்றதாகவும், அப்போது ஆஜர் எதிரிகள் அங்கு சென்று தடுத்து நிறுத்தி தகராறு செய்தார்கள் என்றும், அப்போது பாபுவை பார்த்து ஆஜர் எதிரிகள் உன்னை கொலை செய்யாமல் விடமாட்டோம் என்று மிரட்டியதாகவும், அந்த இடத்தில் நானும் மற்றும் ஊர் பெரியோர்களும் சென்று சமாதானம் செய்து வைத்தோம் என்றும், இந்நிலையில் கடந்த 25.4.2013ந் தேதி மாலை 6.45 மணியளவில் எங்கள் ஊரைச் சேர்ந்த வீராசாமி வீட்டின் திண்ணையில் பாபு உட்கார்ந்து இருந்தார் என்றும், அங்கு சென்ற ஆஜர் எதிரிகள் பாபுவிடம் தகராறு செய்து கத்தியால் குத்திவிட்டார்கள் என்று கேள்வி பட்டு நான் அங்கு சென்று பார்த்தபோது பாபுவின் கையில், கன்னத்தில், நெற்றியில், தலையின் பின்பக்கத்தில் ரத்தக் காயங்களுடன் இருந்தார் என்றும், அவரை அங்கிருந்தவர்கள் ஒரு டாடா ஏஸி வாகனத்தில் ஏற்றி திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், அங்கு பாபு சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாகவும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> -** இல்லை.

ஒம்/- அமாவாசை

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.